சங்கராபுரம் தொகுயில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

641—(*வினா எண் 3995)—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் 1987–88 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987–88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் வெள்ளிமலை போன்ற பகுதியிலே அரசாங்க மருந்தகம் என்று சொல்லி ஆரம்பித்து டாக்டர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் டாக்டர்கள் அங்கு செல்வதேயில்லை. அந்த பகுதிகளிலே அதிகமான மருத்துவமனைகள் கிடையாது. எனவே, உடனடியாக அந்த மலைவாழ் மக்களுக்காக மருத்துவர்களை நியமித்து, அங்கேயே தங்கி சிகிச்சை செய்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுடைய நலத்தைக் கருதி அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்களுக்கு தங்குவதற்காக குவார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதில் அவர்கள் தங்கவில்லை என்று புகார் வருகின்றபோது, அவர்கள் அங்கே தங்குவதற்கும், அவர்கள் அங்கேயிருந்து பணிபுரிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டம்.

642. (*வினா எண். 4616)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1985–86 ஆம் ஆண்டுக்கு ஆதி திராவிட நலத்துறை மூலம் சேலம் மாவட்டத்தில் மத்திய சிறப்பு நிதி உதவி திட்டத்தின்கீழ் புதுச்சத்திரம் ஒன்றியத்தினை எடுத்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா?

1987 மே 8]

(ஆ) ஆம் எனில், பணியினை எப்போது செயல்படுத்தும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1985-86 ஆம் ஆண்டிற்கான ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேலம் மாவட்டத்தில் சங்கரி ஒன்றியம் மத்திய சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதால், புதுச்சத்திரம் ஒன்றியம் மேற்கண்ட திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 1986–87 ஆம் ஆண்டிற்கான கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் நாமக்கல் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டமைப்புத் திட்டத்தில் தான் (Cluster Development Programme) புதுச் சத்திரம் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு உள்ளடக்கத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற நியதி இல்லை. அங்குள்ள ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில் என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்று ஆராய்ந்து தக்க முன் மொழிவுகளை விரைவில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டுகளில் இந்த ஒன்றியத்தை சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ள அரசு உறுதிமொழி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆட்சியாளர், அங்கே பெரும்பாலும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் பேர்கள் அங்கே இந்த திட்டத்திலே பயன்பெறுகின்ற அளவிலே இருக்கின்ற போது க்ளஸ்டர் புரோக்ராமில் அவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு ஆய்வு அனுப்புகிறபோதுதான் அதை சேர்த்துக்கொள்கிறோம். அப்படி அவர்கள் அனுப்புகின்றபோது அரசு அதை சேர்த்துக்கொள்ளும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்த மத்திய சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மக்களுக்கு எந்தெந்த துறையின் மூலம், என்னென்ன பணிகளுக்கு, என்னென்ன திட்டங்களுக்கு உதவி அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு திட்டத்தின் கீழ் நேபாள தறியும் அதைப்போலவே அங்கே மலையிலே வாழ்கின்றவர்களுக்கு சிறுதொழில் செய்வதற்கு வேண்டிய கைத்தறிக் கூடங்கள் அமைத்துக் கொடுத்தும் இப்படி பல திட்டங்கள் வாயிலாக அவர்களுக்கு தறிகளை அளித்து அங்கே தேர்ந்தெடுத்த இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த திட்டங்களைப்பற்றி தனிக் கேள்வி கேட்கின்றபோது விரிவான பதில் சொல்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, க்ளஸ்டர் திட்டத்தின் மூலமாக ஆயிரம் ஹரிஜனக் குடும்பங்களை முன்னுக்கு கொண்டு வருவதற்காக திட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் நேபாளத் தறி போடக்கூடிய 10 இடங்களிலே நாம் ஆங்காங்கே இந்த கூடங்கள் கட்டி அந்த நூற்பு வசதியை செய்து கொடுப்பதற்கு வழி செய்கின்றோம். இவைகளைக்கூட மாற்றக்கூடிய அளவிலே மாற்றி, ஒரே இடத்தில் அல்லது இரண்டு இடங்களிலே 500 பேர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு இந்த நூற்பு ஆலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா ? இந்தப் பணம் கூட அன்லிமிடெட். எவ்வளவுக்கு நாம் திட்டம் போட்டு அனுப்புகிறோமோ அவ்வளவிற்கு பணம் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்களே அவையெல்லாம் உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனை. இருந்தாலும் அங்கே ஒரே இடத்தில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கவேண்டும். 500 பேர்கள் ஒரே இடத்தில் கிடைப்பது அரிதாக இருக்கும். அப்படி அதிகமாக இருக்கின்ற இடத்தில் இந்தத் தறிகளை ஆரம்பிக்கின்றோம். பணத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, சிறப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் ஆண்டுக்கு ஒரு ஒன்றியத்தை எடுத்துக்கொள்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1987–88 ஆம் ஆண்டுக்கு எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கு செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர், வட ஆற்காடு மாவட்டம் தரணம்பட், தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை, சேலம் மாவட்டம் நாமக்கல், பெரியார் மாவட்டம் குண்டாடம், கோவை மாவட்டம் குடிமங்கலம், நீலகிரி மாவட்டம் கூடலூர், தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில், திருச்சி மாவட்டம் கடலூர், தஞ்சை மாவட்டம், சீர்காழி, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், இராமநாதபுரம் மாவட்டம் நாயனார் கோயில், மதுரை மாவட்டம் சேடப்பட்டி, திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் மானூர், கன்னியாகுமரி மாவட்டம் ராஜக்காமங்கலம், அண்ணா மாவட்டம் தோப்பம்பட்டி, காமராஜர் மாவட்டம் வத்திராயிருப்பு, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மானாமதுரை போன்றவை ஆகும்.